# தகவலறிந்த ஒப்புதலில் உதவுவதற்காக

**கோவிட்-19 தடுப்பூசி நடவடிக்கை**

**தடுப்பூசி, குறிப்பிட்ட வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்களுக்கு எதிராக உங்கள் உடலின் பாதுகாப்பு அம்சங்களை தயார்படுத்துகிறது.**

**உங்கள் நோயெதிர்ப்பு மண்டலம் கோவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸை திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கு இந்த தடுப்பூசி உதவும்.**

## நான் ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

- இது கோவிட்-19 இலிருந்து பாதுகாக்கிறது மேலும் நீங்கள் நோய்வாய்ப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது
- பலர் சிகிச்சைப் பெறாமல் குணமடைந்தாலும், சிலர் கோவிட்-19 ஆல் இறக்க நேரிடலாம் அல்லது இதய நோய் அல்லது நிமோனியா போன்ற நுரையீரல் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடலாம். நரம்பு மண்டலம் கூட பாதிக்கப்படலாம்

## தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு மிகவும் அடிக்கடி ஏற்படும் அறிகுறிகள் யாவை?



ஊசி போடும் இடத்தில் வலி ஏற்படுதல்




சோர்வு, தலைவலி, தசை அல்லது மூட்டு வலி மற்றும் காய்ச்சல

இவை ஒன்று அல்லது இரண்டு நாட்களில் மறைந்துவிடக் கூடிய மிதமான அறிகுறிகளாகும். இவற்றிலிருந்து நீங்கள் நிவாரணமடைய அசிட்டமினோ:பன் அல்லது ஐப்யூபுரூ:பன் போன்ற காய்ச்சல் அல்லது வலி மருந்தை எடுத்துக் கொள்ளலாம்.

## வேறு அரிதான அறிகுறிகள் உள்ளனவா?

ஒவ்வாமை எதிர்வினைகள் அரிதாக ஏற்படுகின்றது, இவைகள் ஏற்படும் பட்சத்தில், பொதுவாக தடுப்பூசி போட்ட சில நிமிடங்களில் ஊசிப் போட்டுக் கொண்டவர்கள் கண்காணிப்பில் இருக்கும்பொழுதே இவைகள் தோன்றுகின்றன, உடனடியாக அப்போதே இவற்றுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

வரவிருக்கும் மாதங்களில், பெரும்பான்மையான மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாத வரையில், கோவிட்-19 நீடித்து இருக்கும்.

**நம்மைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வோம்!**




உங்கள் இடைவெளியை கடைபிடியுங்கள்



உங்கள் முகத்தை மறைக்கவும்



உங்கள் சட்டையின் கைகளில் இருமவும்



கைகளை கழுவவும்

**Québec.ca/vaccinCOVID**

1 877 644-4545

20-279-23WFA

Votre gouvernement

Québec